

வாகன நெரிசல்
எரிபொருள் வீனடிப்பு, பயனீட்டாளர் மன அழுத்தம், குடும்ப அமைதி கெடுதல், நேர விரயம், சுற்றுச்சூழல் தூய்மைக்கேடு, விபத்துகள் - தவிர்க்க - அரசாங்கம்
வளர்ச்சியடைந்த நாடு, மலேசியா
சிறிய பட்டணம், பெரிய நகரம் காலை, மாலை (வேலைக்குச் செல்பவர்)
முன்னுரை
முடிவுரை
வாகன நெரிசல்
மோசமான போக்குவரத்து வசதி
கரு 1
தரம், முறையான பயணக்கிட்ட இல்லை
பேருந்துகள்
வாடகை வண்டிகள்
இரயில்கள்
பேருந்து - சிறு ஊர், நகரம் - ஓடுவதில்லை
கரு 3
போக்குவரத்து - முறையாக நிர்வகிக்கும் நடவடிக்கை - இல்லை
நிர்வாகக் கொள்கைகள் செயல்பாடுகள், போக்குவரத்தை ஒழுங்கு செய்யும் காவலர் குறைவு
கரு 2
'ஏழைகளும் வாகனம் வாங்கலாம் முன்பணம் இல்லாமல் முழுக்கடன் - வங்கி - வசிதி
வாகனங்கள் - நிரம்பி வழிதல்
எண்ணிக்கை - கட்டுப்பாடு-இல்லை விபத்து, காற்றுத்தூய்மைக்கேடு, சுற்றுச்சூழல் - வெப்பம்
LIVEWORKSHEETS

கருத்துகளை வாசித்து பின் நிரல்படுத்து. காலியான இடத்தில் வரிசைக்கிரமமாகப் பொருத்துக.

எரிபொருள் வீண்டிப்பு, பயனீட்டாளர்களின் மன அழுத்தம், குடும்ப அமைதி கெடுதல், நேர விரயம், சுற்றுச்சூழல் தூய்மைக்கேடு, விபத்துகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு சாலை நெரிசலை முறையாக நிர்வகிக்கும் கொள்கையை அரசு உருவாக்க வேண்டும். பொருத்தமான நடவடிக்கைகளை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

நம் நாட்டில் பொது போக்குவரத்துச் சேவைகள் போக்குவரத்திற்குத் தடையாக ஒரு புறமிருக்கிறது. மறுப்புறம் 'ஏழைகளும் வாகனம் வாங்கலாம்' எனும் தந்திர அடிப்படையில் முன்பணம் இல்லாமல் முழுக்கடன் பெற்று வாகனம் வாங்கும் வசதிகளை வங்கிகள் வழங்குவதால் நமது சாலைகளில் எந்நேரத்திலும் வாகனங்கள் நிரம்பி வழிகின்றன. வாகனங்கள் வாங்கும் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தாத காரணத்தால் வாகன நெரிசல் அதிகரிப்பது மட்டுமின்றி விபத்துகளையும் காற்றுத் தூய்மைக் கேட்டையும் சுற்றுச் சூழலில் வெப்பத்தையும் கூட்டுகிறது.

வளர்ச்சியடைந்த பெரும்பான்மையான நாடுகளில் வாகன நெரிசல் என்பது தலையாய பிரச்சனையாக உள்ளது. மலேசியாவிலும் அந்தப் பிரச்சனை அதிகம் உள்ளது. இங்குச் சிறிய பட்டணம் முதல் பெரிய நகரம் வரை போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது வழக்கமானதாக இருக்கிறது. காலையில் வேலைக்குச் செல்லும் நேரத்திலும், பின் வீடு திரும்பும் மாலை நேரத்திலும் வாகன நெரிசல் அதிகம் ஏற்படுகிறது. சனி, ஞாயிறுகள், இதனை ஒட்டிக் கூடுதலாக வரும் விடுமுறை நாட்கள், விழாக் காலங்கள் இப்படி எல்லாக் காலங்களிலும் சாலை நெரிசல் மலேசியப் பண்பாட்டில் ஒரு கூறு ஆகிவிட்டது.

LIVEWORKSHEETS
LIVEWORKSHEETS

சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில் இருக்கும்போது, போக்குவரத்தை முறையாக நிர்வகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாத வேளையில் வாகன நெரிசல் ஏற்படவே செய்யும். சாலை நெரிசலுக்கான நிர்வாகக் கொள்கைகள், செயல்பாடுகள் மற்றும் போக்குவரத்தை ஒழுங்கு செய்யும் காவலர் போன்றதொரு நடவடிக்கைகள் குறைந்த அளவில் இருப்பதால் வாகன நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது எனலாம்.

மலேசியாவில் வாகன நெரிசல் ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைவது மோசமான பொது போக்குவரத்து வசதிகள் எனலாம். நமது நாட்டில் பேருந்துகள், வாடகை வண்டிகள் மற்றும் இரயில்கள் போன்ற வாகனங்கள் தரத்தையும் முறையான பயணத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதே இதற்குக் காரணம். ஒரு காலத்தில் சிறந்த போக்குவரத்துத் துணைவனாக இருந்த பேருந்துகள் இன்று சிறு நகரங்களிலும் சிறு ஊர்களுக்கு இடையிலும் ஓடக் காணோம். ஓடுகின்றவை எப்போது வரும் போகும் என்று சொல்ல முடியாது.

LIVEWORKSHEETS
LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS
LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS
LIVEWORKSHEETS